Balwadies

* 228 Q.—THIRU G GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(*a*) whether there are proposal under the consideration of the Government for the construction of 'Kulanthaigal Kappagangal' with the assistance of CARE in this State, and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) ஆம்.

(இ) "கேர்" நிறுவனத்தின் உடனுழைப்புடன் 1.20 லட்சம் பள்ளி செல்லும் நிலையடையாக் குழந்தைகளுக்கும், கர்ப்பிணி களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் அன்றாடம் சத்துணவு வழங்குவதற்கான திட்டம் ஒன்றை இந்த அரசு வகுத்துள்ளது. இத்திட்டம் இம்மாநிலத்தில் உள்ள 1,000 குழந்தைகள் காப்பகங் களில் (பால்வாடிகள்) (பாலர் கல்வி நிலையங்கள்) செயல்படுத்தப் படும். ஒவ்வொரு காப்பகத்திலும், ஆண்டின் 300 நாட்களுக்கு 80 சிறுவர்களும், 40 தாய்மார்களும் உணவு பெறுவர். காப்பகங் களுக்கு முழுமையான கட்டிடங்கள் கட்டுவதற்கும் இத்திட்டம் வகை செய்கிறது. இது தவிர, மகளிர் மன்றங்களுக்கு இணைப்பாக நிலையான சிறு சமையற்கூடங்கள் 375 கட்டுவதற்கு இந்த "கேர்" நிறுவனம் ஒப்புக்கொண்டுள்ளது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: இந்தக் குழந்தைகள் காப்ப கங்கள் கட்டுவதற்கு கேர் நிறுவனத்திலிருந்து பயிற்சி அளிக்கப் படுகிறதா? அந்தப் பயிற்சி நல்ல முறையில் எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு குழந்தைகள் காப்பகங்களில் முதல் கட்டமாக 500 குழந்தைகளுக்கான காப்பகங்கள் இந்த ஆண்டு கட்டப்படும். அதோடு மகளிர் மன்றங்களுக்கு இணைப்பாக நிலையான சிறு சமையற்கூடங்கள் 375 கட்டுவதற்கும் இந்த ஆண்டில் திட்டமிடப் பட்டுள்ளது.

Building for office of Pallipet Panchayat Union.

* 229 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(*a*) whether there is any proposal with the Government to construct additional buildings to Panchayat Union Office in Pallipet Union, Chingleput district; and

(*b*) if so, the estimate thereof?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) ஆம்.

(இ) ரூபாய் 40,000.